OS.No.404/2022 P.W.1-மங்களம் 09.01.2026

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கு சொத்திற்கு கிழக்கில் தென்பகுதியில் என் சகோதரர் வித்யாசாகர் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீட்டில் தான் வித்யாசாகரும், அவருடைய மனைவி மரியபுஷ்பம், அவரது பிள்ளைகள் தமிழ்இலக்கியா, தமிழ்வாணன் ஆகியோர் வசித்து வந்தார் என்றால் சரிதான். அந்த வீட்டையும், வீட்டு மனையையும் சேர்த்து வித்யாசாகர் அவரது மனைவிக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அவருடைய மனைவியான இந்த வழக்கின் 7ம் பிரதிவாதி அந்த வீட்டையும், வீட்டு மனையையும் சேர்த்து ஸ்ரீராம் சிட்டியுனியன் பைனான்சில் அடமானம் வைத்திருந்தார் என்றால் தெரியவில்லை. அடமான பணம் செலுத்தாததால் ஸ்ரீராம் பைனான்ஸ் அந்த வீட்டு மனையை ஏலத்திற்கு விட்டு விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது அந்த வீட்டில் வித்யாசாகரின் மனைவி, பிள்ளைகள் குடியிக்கவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து வித்யாசாகர் மற்றும் 1ம் பிரதிவாதி சந்திரசேகர் ஆகியோர்கள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எவ்வளவு சொத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. இந்த வழக்கு சொத்தின் 4 பக்க எல்லைகள் எனக்கு தெரியாது என்றால் தெரியும். தற்போது சாட்சி தெரியாது என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பட்டா கண்ணையன் மகன் சந்திரசேகரன், கண்ணையன் மகன் குணசேகரன், கண்ணையன் மகன் வித்யாசாகர் ஆகியோர்கள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் பெயரில் பட்டா இருந்ததா என்றால் அது பற்றி தெரியாது. இந்த வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரர்களுக்கும் தான் பாத்தியப்பட்டது என்றும், அவர்கள் தான் ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றும், எனது தகப்பனார் சொத்தை அனுபவிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் என் தகப்பனார் பெயரில் எந்த ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 40 ஆண்டுகளுக்கு மேலாக 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரர்களும் வழக்கு சொத்தை ஆண்டு அனுபவித்து வருவதால் நான் அனுபவத்தில் இருப்பதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் 1ம் பிரதிவாதி தான் எங்களுக்கு பாகம் கொடுப்பதை தடுத்து வருகிறார் என்று

சொல்வது தவறு என்றும், நான் எந்த காலத்திலும் கூட்டு அனுபவத்திலும், சுவாதீனத்திலும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. என் மகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையில் ஏற்பட்ட மனப்பிணக்கின் காரணமாக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த பாகமும் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடிக்கு தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை